# யார் அந்த சிறுவன்

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

பத்து வயது நிரம்பிய சிறுவன் ஒருவன், விதைவையான தன் தாயாரை விட்டு பிரிந்து தனது அண்ணனுடன் வெகுதூரத்திலுள்ள பள்ளிக்கு படிக்க சென்றான். அங்கு அவன் தாயை விட்டுப் பிரிந்து, துயரத்தில் மூழ்கி இருந்தான். அவனது அண்ணன் அவனை உற்சாகப்படுத்துவதற்காக அருகிலிருந்த கடைதெருவுக்கு கூட்டி சென்றான். அந்த சிறுவன் அழுது கொண்டிருந்தான். அண்ணன் தூரத்தில் வந்து கொண்டிருந்த ஒரு பெரியவரை காண்பித்து, அழாதே! அந்த பெரியவர் உனக்கு ஒரு ரூபாய் காசு கொடுப்பார்" என்று சொன்னான். அது எப்படி உனக்கு தெரியும் என்று அந்த சிறுவன் கேட்டான். இந்த பட்டணத்திற்குள் வரும் ஒவ்வொரு புதிய நபருக்கும் அவர் காசு கொடுப்பார்" என்று அண்ணன் பதில் கூறினான். சிறுவனும் ஆவலோடு அந்த பெரியவர் தனது அருகில் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வயதானவர் சிறுவனின் அருகில் வந்ததும் அவர் தனது தலையில் இருந்த தொப்பியை எடுத்து விட்டு, சிறுவனை பார்த்து ஊருக்குப் புதிதா என்று கேட்டார். இன்று தான் இங்கே வந்தான் என்று அண்ணன் பரிந்துரைத்தான். சிறுவனும் அவரது சட்டைப் பைக்குள் அவர் கை செல்கிறதா என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். அந்த முதியவர் சிறுவனிடம் அன்பாக "பரலோகத்தில் நம் தந்தையாம் கடவுள் இருக்கிறார். அவர் நாம் ஒவ்வொருவரும் நடக்க வேண்டிய வழிகளை வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளார். நாம் அதன்படி செய்யவில்லை என்றால் அவருடைய தண்டனைக்கு ஆளாவோம். நாம் தண்டனைக்கு தப்ப வேண்டுமென்பதற்காக அவர் தமது குமாரனாகிய இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பினார். நமது பாவங்களுக்கு பரிகாரமாக அவர் சிலுவையில் மரித்தார். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் நமது பரம தந்தையாகிய பிதா, நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து, பரம ராஜ்யத்தில் என்றென்றும் அவரோடு வாழ நம்மை அழைத்து செல்வார்", என்று பொறுமையுடன் விளக்கிக் கூறினார். சிறுவனுக்கு தனது தாயைப் பிரிந்த கவலை எல்லாம் பறந்தோடியது. இயேசுவை தனது தந்தையாக, தனது இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அந்த முதியவரும் அவனுக்கு ஒரு ரூபாய் காசைக் கொடுத்துச் சென்றார். அப்பொழுது அந்த சிறுவனுக்குள் இருந்த எண்ணமெல்லாம் "நான் ஒரு பெரிய செல்வந்தனாகி விட்டேன். இனிமேல் என் தேவைகளை சந்திக்க இயேசு அப்பா எனக்கு இருக்கின்றார்" என்பதுதான்.

பின்நாட்களில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தேசத்தில் பெரிய எழுப்புதலுக்கு காரணமாய் இருந்த டி.எல்.மூடி பிரசங்கியார் தான் அந்த சிறுவன். "இன்னும் அந்த முதியவர் பேசிய வார்த்தைகள் என் காதில் தொனித்து கொண்டிருக்கிறது", என்று ஐம்பது வருடம் கழித்து டி.எல்.மூடி ஒரு பிரசங்கத்தில் கூறினார். ஏற்ற நேரத்தில் அந்த சிறுவனுக்கு அந்த முதியவர் கூறிய நற்செய்தி எவ்வளவு பெரிய ஊழியரை உருவாக்கியது பாருங்கள். குட்டீஸ் நீங்களும் இந்த முதியவரைப் போல சரியான நேரத்தில் இயேசப்பாவைப் பற்றி மற்றவர்களுக்கு செல்லிடுங்க. அப்போ அவர்களும் பயனடைவார்கள். இயேசப்பாவிடம் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். ok bye குட்டீஸ்

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா என்னுடைய பாவத்திற்கான தண்டனையை நீர் ஏற்றுக் கொண்டு எனக்காக சிலுவையில் மரித்தீரே உமக்கு நன்றி இயேசப்பா. என் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் உள்ளத்திற்குள் வாங்க இயேசப்பா. உம்மை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன். இனிமேல் உம் பிள்ளையாய் வாழ உதவி செய்யும், காத்துக் கொள்ளும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்".
நீதி 25:11

